பக்கங்கள் எட்டு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலகத்துறைப் படிப்பகம்

விலைரூபா 5.00

# வலம்புரி
## VALAMPURI

உள்ளே →
க. பொ. த.
சாதாரணதர
மாணவருக்கான
விவசாயம்
பகுதி I

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 29 வியாழக்கிழமை ( 14-9-2000 ) தொ. பேசி;- 3378 ஒலி: 269

## ★ ஜனாதிபதியின் விசேட அதிகாரத்தின்கீழ் அவசரகாலச்சட்டத்தை நீடிப்பதற்கு இன்று பாராளுமன்றம் கூட்டப்படுகிறது!

### 10-வதுபாராளுமன்றத்தின்கடைசிக்கூட்டம்!

[ கொழும்பு விசேட நிருபர் ]

கடந்தமாதம் 18ஆம் திகதி கலைக்கப்பட்ட 10ஆவது பாராளுமன்றத்தை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கா தனக்குரிய விசேட அதிகாரத்தின் கீழ் மீண்டும் இன்று காலை கூட்டவுள்ளார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்க வகை செய்யும் மசோதாவை நிறைவேற்றுவதற்காகவே இன்று பாராளுமன்றம் கூடவுள்ளது. அவசரகாலச்சட்டம் நீடிக்கப்படுவதை இன்றைய பாராளுமன்ற அமர்வு அங்கீகரிக்கும் பட்சத்தில் தற்போதைய எம். பி.க்கள் அனைவரும் அடுத்த மாதம் 14ஆம் திகதி வரை [அதாவது தேர்தலுக்குப் பின்னும்] எம். பி.க்களாக இருந்து எம். பிக்களுக்குரிய சலுகைகளை அனுபவிப்பார்கள்.

அவசரகால சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கு ஜனாதிபதியினால் இன்று கூட்டப்படவுள்ள கூட்டம் பத்தாவது பாராளுமன்றத்தின் இறுதிக் கூட்டமாகும்.

இக் கூட்டத்தில் அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கு 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 20 எம்.பிக்கள் மட்டும் கலந்துகொண்டாலே கூட்டம் கூடுவதற்கு

[8ஆம் பக்கம் பார்க்க]

## ஈழத்தைபிரகடனப்படுத்தியவரதருக்கு தேசியப்பட்டியலில் இடமா?

### ஜனாதிபதியிடம் ரணில் கேள்வி



(கொழும்பு)

இலங்கை ஒரு ஒற்றை ஆட்சி நாடு வரதராஜப்பெருமாள் தன்னாதிக்கத்தைப் பயன்படுத்தி ''ஈழத்தை'' பிரகடனப் படுத்தி ஒற்றை ஆட்சிக்கு இழுக்கை ஏற்படுத்தியுள்ளார்.

ஒற்றையாட்சிக்கு ஒவ்வாத செயலைச் செய்தவருக்கு தேசியப் பட்டியலில் இடம் கொடுத்தது முற்றிலும் தவறானதாகும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

வரதராஜப் பெருமாளின் ஈழப் பிரகடனம் தொடர்பாக பகிரங்க விவாதம் ...

ஒன்றை நடத்த ஜனாதிபதியை நான் அழைக்கிறேன் இதற்கு ஜனாதிபதி முன் வரு...

## அரச ஊழியர்களின் லீவுகள் யாவும் ரத்து!

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலை ஒட்டி சகல அரசாங்க ஊழியர்களது லீவுகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மேலதிக செயலாளர் ஜெயரட்ணம் கட்டாய லீவில் அனுப்பப்பட்டார்

(கொழும்பு)

கப்பல்துறைமுக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் ஜெயரட்ணத்திற்கு கட்டாய லீவு வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தேசிய ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் பட்டியலில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலை, கொழும்புத்துறை மக்கள் பொருட்களை எடுத்துவர அனுமதி

(யாழ்ப்பாணம்)

அண்மைக்கால யுத்த நெருக்கடி காரணமாக கொழும்புத்துறை, அரியாலை ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் விட்டுச்சென்ற பொருட்களை மீட்பதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் ஈ.பி.டி.பி.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ★ மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் இரு வேறு கிளைமோர் தாக்குதலில் ஒருவர் பலி 7பேர் காயம்

தியுள்ளார்.

ஒற்றையாட்சிக்கு ஒவ்வாத செயலைச் செய்தவருக்கு தேசியப் பட்டியலில் இடம் கொடுத்தது முற்றிலும் தவ

மேலும் தெரிவித்திருப்பதாவது,

வரதராஜப் பெருமாளின் ஈழப் பிரகடனம் தொடர்பாக பகிரங்க விவாதம்

ஒன்றை நடத்த ஜனாதிபதியை நான் அழைக்கிறேன் இதற்கு ஜனாதிபதி முன் வரு

(8 ஆம பக்கம் பாரக்க)

# மகாசங்கம் இணங்கினால் மட்டுமே இனப்பிரச்சினைக்குதீர்வு காணலாம்

## பிரதமர் ரட்ணசிறி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினையில் தமிழ் அரசியல் கட்சிகளும் பௌத்த மகா சங்கங்களும் கருத்தொருமித்தால் மட்டுமே தீர்வு காணப்படுமென

பிரதமர் இரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்காகத் தயாரிக்கப்பட்ட உத்தேச அரசியல் யாப்பில் அளவுக்கதிகமான உரிமை தமிழருக்கு வழங்கப்பட்டுள்ளதாக மகா சங்கமும் போதிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லையென தமிழ்க் கட்சிகளும் மாறிமாறி குற்றம் சுமத்தி வருகின்றன.

இந்நிலையில் இருதரப்பினரும் ஒற்றுமைப் பட்டால் மட்

(8ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் இரு வேறு கிளைமோர் தாக்குதலில் ஒருவர் பலி 7பேர் காயம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற இரண்டு வெவ்வேறு கிளைமோர் தாக்குதல் சம்பவங்களில் இராணுவத்தினர் ஒருவர் பலியாகியதுடன் 6 இராணுவத்தினரும்

[8ஆம் பக்கம பார்க்க)

# 18 அங்குலநீளவாக்காளர்அட்டைகள்

(கொழும்பு)

தேர்தல் வாக்காளர் அட்டைகள் இன்று முதல் சகல தேர்தல் மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் களத்தில் பல அரசியல் கட்சிகள் குதித்துள்ளதால் இம்முறை வேட்பாளர் தொகை அதிகரித்துள்ளது. இதனால் தேர்தல் வாக்காளர் அட்டைகள் சுமார் 18 அங்குல நீளமுள்ளதாக அச்சடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# பிச்சைக்கார வேடத்தில் தற்கொலைக் குண்டுதாரிகளாம்!

## பொலிஸார் வலை விரிப்பு

(கொழும்பு)

கம்பஹாப் பகுதியில் விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படையணிகள் ஊடுருவியிருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் அப்பகுதிகளில் உள்ள பிச்சைக்காரர்களைத் தேடி பொலிஸார் கைதுசெய்து வருகின்றனர்.

பிச்சைக்காரர் வேடத்தில் விடுதலைப்புலிகள் ஊடுருவியுள்ளார்கள் என்ற தகவலையடுத்தே திடீர்த் தேடுதல் மூலம் சுமார் 50 பிச்சைக்காரர்களை பொலிசார் கைதுசெய்துள்ளனர் என்றும் இதேபோல கடந்த வாரமும் கொழும்பில் பிச்சைக்காரர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட் படுத்தப் பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (வ)

# தேர்தல் களத்தில் காங்கிரஸ் கட்சி பொய்ப் பிரச்சாரங்களை நம்பாதீர்!

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சி வடக்குக் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு திருகோணமலை. வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் தென்பகுதியில் கொழும்புமாவட்டத்திலும் போட்டியிடுவதாக அக் கட்சியின் தலைவர் அப்பாத்துரை வினாயகமூர்த்தி பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் போட்டியிடுவதை விரும்பாத சில விஷமிகளால் பரப்பப்படும்

(8ஆம்பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ் சிறு விளம்பரம்


### தேவை

இணுவிலில்இயங்கிக்கொண்டிருக்கும் ஆடை தைக்கும் தொழிற்சாலைக்கு மேற்பார்வையாளர், வெட்டுபவர், தைப்பவர், பிறா தைப்பவர், பூப்போடுபவர்கள் தேவை. இடம் பெயர்ந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். சகல விபரங்களுடனும் 20 - 09 - 2000 முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 110, வலம்புரி இல-5வெள்ளாந்தெரு, யாழ்பாணம். [கி/786]


### மண்டைதீவு பிள்ளையார் கோவில்

# தேர்த்திருவிழாவிற்குசென்றவர்களை கடற்படையினர் திருப்பியனுப்பினர்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு திருவெண்காடு பிள்ளையார் ஆலய தேர்த் திருவிழாவிற்கு யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற மண்டைதீவு மக்களை கடற்படையினர் திருப்பியனுப்பினர்.

இதனால் பெருந்திரளான மக்கள் ஆலயத்திற்கு செல்ல முடியாது வேதனையுடன் திரும்பினர்.

மண்டைதீவிற்குச் செல்வதற்குக் கடற்படையினர் கடுமையான சட்டதிட்டங்களை விதித்துள்ளமை குறித்து அரசியல் கட்சிகள், வேலணை பிரதேச செயலகம் ஆகியவற்றின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளபோதிலும், அவர்கள் எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லையெனத் தெரிய வருகிறது.

இதேவேளை மண்டைதீவுக்குச் செல்வதற்கு கடற்படையினர் விதித்துள்ள தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மிக விரைவில் வேலணை பிரதேசசெயலகத்தின் முன்பாக மறியற் போராட்டம் நடத்துவதற்கு மண்டைதீவு பொது அமைப்புகள் திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது; (ந)

## காரைநகரில் ரெலோ தேர்தல் பிரச்சாரம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கான பிரச்சார நடவடிக்கைகளை ரெலோ அமைப்பு துரிதமாக மேற்கொண்டு வருகிறது. அண்மையில் காரைநகர், சங்கானை, சங்குவேலி, உடுவில் ஆகிய பகுதிகளில் பிரச்சார வேலைகளில் ஈடுபட்டனர்.

காரைநகரில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரங்களில் ரெலோவின் சுயேட்சைக்குழு யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் என். ஸ்ரீகாந்தா. ரெலோ முதல்வர் சிவாஜிலிங்கம், செல்லப்பா பத்மநாதன், டாக்டர் சுப்பையா ஆகியோர் கலந்துகொண்டனர். (ந)

## சாட்டிமாதா திருப்பலிநிகழ்வு ஆரம்பம்

(மண்டைதீவு)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற புனித சாட்டி மாதா ஆலயத்தின் வருடாந்த திருப்பலி நிகழ்ச்சிகள் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி, தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ்வருடமும் பக்தர்கள், யாத்திரிகர்கள் பலர்இத்தலத்திற்கு வருவார்கள் எனஎதிர்பார்க்கப்படுவதால் அதற்கேற்ப ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும், நாட்டுச் சூழ்நிலைக்கேற்ப மாற்றங்கள் செய்யப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ-83)

## இப்படியும் திருட்டு

(மந்துவில்)

குடிப்பதற்குத் தண்ணீர் தருமாறு கேட்டு, வீட்டினுள் நுழைந்த இளைஞர்கள் சிலர் அவ்வீட்டுப் பெண்ணின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துச்சென்றுள்ளனர்.

பண்டத்தரிப்பு மாதா கோவிலுக்குஅண்மையிலுள்ள வீடொன்றிலேயே இத்துணிகரச் சம்பவம் நடந்துள்ளது.

இச்சம்பவம் நிகழ்ந்த போது அப்பெண் மணியின் கணவரும் பிள்ளைகளும் வெளியில் சென்றிருந்தார்கள் எனத்தெரிவிக்கப்படுகிறது. (செ-39)


### ஸ்ரீ செல்வா

[யாழ்ப்பாணம்]

(இன்று மட்டும்)

சரத்குமார் கவுண்டமணி செந்தில் நடித்த

"கட்டப்பொம்மன்"

காட்சிகள்: 10.30 - 2.00 (ப.நே) [இ 688



### உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுவோர் கவனத்திற்கு

சில தினங்களில் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் கப்பல் மூலம் ஏற்ற இருப்பதால் வாடிக்கையாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் தொடர்பு கொள்ளவும்.

ஜெசிபா ஏஜென்சி

132, ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்.

T. P. 2407. (இ-798)


## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

செப்ரெம்பர்மாதம்11-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் தரப்படுகின்றது:

**சங்கானை**

| | |
|---|---|
| 152176 ஏ | 160468 ஏ |
| 160744 ஏ | 160744 பி |

**யாழ்ப்பாணம்**

| | |
|---|---|
| 144573 ஏ | 144573 பி |
| 149987 ஏ | 150090 ஏ |
| 153055 ஏ | 153055 பி |
| 154285 ஏ | 154285 பி |
| 154285 சி | 154285 டி |
| 154285 ஈ | 154285 எவ் |
| 155473 சி | 156643 சி |
| 159288 ஏ | |

**கோப்பாய்**

| | |
|---|---|
| 154088 ஏ | |

**நல்லூர்**

| | |
|---|---|
| 149839 ஏ | 150262 ஏ |
| 150262 பி | 150269 ஏ |
| 150269 பி | 150269 சி |
| 150269 டி | 154158 ஏ |
| 156206 ஏ | 156206 பி |
| 156239 ஏ | 156240 ஏ |
| 156240 பி | 156240 சி |
| 143949 ஏ | 143949 பி |
| 143949 சி | 158689 ஏ |
| 158689 பி | 158734 ஏ |
| 158834 ஏ | 160479 ஏ |
| 160669 பி | 160669 சி |
| 160669 டி | 160671 ஏ |
| 160747 ஏ | 160747 பி |

**சண்டிலிப்பாய்**

| | |
|---|---|
| 156030 ஏ | 156030 பி |
| 156030 சி | 156030 டி |
| 156030 ஈ | 158534 ஏ |
| 158534 பி | 158534 சி |
| 158536 ஏ | 158536 பி |
| 158536 சி | 158549 ஏ |
| 158579 ஏ | 158579 பி |
| 158579 சி | 158579 டி |
| 158624 ஏ | 158653 ஏ |
| 158653 பி | 158691 ஏ |
| 158691 பி | 158691 சி |
| 158691 டி | 160670 ஏ |
| 160685 ஏ | 160685 பி |
| 160685 சி | 160752 ஏ |

**தெல்லிப்பழை**

| | |
|---|---|
| 157912 ஏ | 158565 ஏ |
| 158565 பி | 160476 ஏ |
| 160477 ஏ | 160477 பி |
| 160477 சி | 160477 டி |
| 160496 ஏ | 160496 பி |
| 160697 ஏ | 160697 பி |

**உடுவில்**

| | |
|---|---|
| 152523 ஏ | 156023 ஏ |
| 160559 ஏ | 160617 ஏ |
| 160618 ஏ | 160652 ஏ |
| 160655 ஏ | 160655 பி |
| 160814 ஏ | 160814 பி |
| 160933 ஏ | |

செப்ரெம்பர் மாதம் 12-ம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றது.

**யாழ்ப்பாணம்**

| | |
|---|---|
| 150146 ஏ | 150146 பி |
| 150146 சி | 150146 டி |
| 150146 ஈ | 152895 ஏ |
| 152895 பி | 152895 சி |
| 154157 ஏ | 154194 ஏ |
| 154194 பி | |

**கோப்பாய்**

| | |
|---|---|
| 144935 ஏ | 144935 பி |
| 150832 ஏ | 150832 பி |
| 150832 சி | 150832 டி |
| 150832 ஈ | 150832 எவ் |
| 154361 ஏ | 154361 பி |
| 154361 சி | 157112 ஏ |
| 157113 ஏ | 157232 ஏ |
| 157285 ஏ | 157285 பி |
| 157406 ஏ | 157406 பி |
| 157452 ஏ | 157452 பி |
| 157486 ஏ | 157511 ஏ |
| 15832 ஜி | 159523 ஏ |
| 159526 ஏ | 159526 பி |
| 159526 சி | 159526 டி |
| 159852 ஏ | 159852 பி |
| 159879 ஏ | 159879 பி |

**நல்லூர்**

| | |
|---|---|
| 136880 ஏ | 136880 பி |
| 144853 ஏ | 144853 பி |
| 145369 ஏ | 148933 ஏ |
| 156691 ஏ | 156691 பி |
| 156691 சி | 156835 பி |
| 156835 ஏ | 157269 ஏ |
| 157505 ஏ | 157505 பி |
| 157509 ஏ | 157509 பி |
| 157509 சி | 157520 ஏ |
| 157520 பி | 157520 சி |
| 157602 | 157686 ஏ |
| 157686 பி | 150208 ஏ |
| 154261 ஏ | 156241 ஏ |
| 156322 ஏ | 156328 ஏ |
| 156328 பி | |

**பளை**

| | |
|---|---|
| 156832 ஏ | 156832 பி |
| 156832 சி | |

**உடுவில்**

| | |
|---|---|
| 144983 ஏ | 157213 ஏ |
| 157213 பி | 157213 சி |
| 157230 ஏ | 157230 பி |
| 157281 ஏ | 157282 ஏ |
| 157617 ஏ | 157617 பி |
| 157617 சி | 157620 ஏ |

(சு)

## இராசி பலன்

14/ 09 / 2000
(ஆவணி29, வியாழன்)
பிரதமை
பி.இ 1.52 வரை
பூரட்டாதி
பி.ப.1.17 வரை
இராகு காலம்
1.33-3.03
சுப நேரம்
7.33-9.03

**மேடம்**
சயன சுகக்குறைவு, பிரயாணம், குடும்பக்கவலை பணச் செலவு.

**இடபம்**
பணவரவு, சென்றஇடத்தில் செல்வாக்கு, காரியசித்தி

**மிதுனம்**
தொழில் மேன்மை, பிரயாணம், இலட்சுமிகரம்.

**கடகம்**
சிறுவியாதி, வீண்பயம், உறவினர்விரோதம்.

**சிங்கம்**
தேவையற்ற பிரச்சினை, அலைச்சல், காரியம் தாமதம்

**கன்னி**
விருந்துபசாரம், திருமண விடயம், பிரயாணம்.

**துலாம்**
புதிய தொழில் முயற்சி, சந்தோஷமானசெய்திசத்துருஜெயம்.

**விருச்சிகம்**
புத்திரரால்கவலை, முயற்சி பலிதம், பணச் செலவு.

**தனுசு**
உறவினர்நம்பிக்கையின்மை சுகக்குறைவு, தடுமாற்றம்.

**மகரம்**
சகோதரர் உதவி, பொருள் வரவு, குடும்ப சுகம்.

**கும்பம்**
விதண்டாவாதம், காரியத் தாமதம், சிறுவியாதி,

**மீனம்**
தெய்வ சிந்தை, ஆரோக்கியம், செல்வாக்கு காரிய அனுகூலம்.

(பழைய நேரப்படி கணிக்கப்பட்டது)

வளவன்

## விடுதலையாகினர்

(யாழ்ப்பாணம்)

இளவாலைப் பகுதியில் கடந்த 7ஆம் திகதி சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட இருவரும் தற்போது இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பெரியவிளானைச் சேர்ந்த அன்ரன் அமிர்தநாயகம் (வயது 34), யோசவ் புலேந்திரன் (57 வயது) ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர். (ந-12)




மாமனிதர்

காணாமற் போனோர் கதியென்ன?
சிறையில் வாடும் இளைஞர் நிலையென்ன?
நீதிக்காக உழைக்க நாமுள்ளோம்.
இவர்கள் கண்ணீர் துடைக்க உதவுங்கள்.

திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி
(மனித உரிமைகளுக்காக உழைக்கும் சட்டத்தரணி)
அவர்களை ஆதரியுங்கள்
உரிமை உணர்வின் சின்னம் - வெல்லும் சின்னம் சைக்கிள்

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்



X



மக்கள் தொண்டன்

(இ -787)

# செய்தித் துளிகள்

## சேவைக்கால கருத்தரங்கு

(கோப்பாய்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் கடமையாற்றும் சைவ சமய ஆசிரியர்களுக்கான சேவைக்கால கருத்தரங்கு இன்று நடைபெறவுள்ளது.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் கலந்து கொள்வோருக்கான அறிவுறுத்தல்கள் ஏற்கனவே பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (த-79)

## வாராந்த நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரின் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு ரி.எம் வாசகர் வழங்கும் ''பக்திப் பாடல்'' நிகழ்வு நடைபெறவுள்ளது.

அறிமுகவுரையை பேரவைத் தலைவர் சி. நாகலிங்கம் வழங்குகின்றார். (செ)

## சிவப் பிரியாவுக்கு இரண்டாம் இடம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வானொலியின் வைர விழா நிகழ்ச்சியை முன்னிட்டு நடத்தப்பட்ட வாய்ப்பாட்டுப் போட்டியில் செல்வி. சிவப்பிரியா வைரமுத்து இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

கொழும்பு சைவமங்கையர் கழகத்தில் சங்கீத ஆசிரியராகப் பணிபுரியும் இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமை புரியும் திரு. திருமதி வைரமுத்து தம்பதிகளின் புதல்வியாவார். (ந)

## ரெலோவின் அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

ரெலோ அமைப்பின் கிளை அலுவலகமொன்று சுன்னாகம் பழைய பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் இவ்வலுவலகம் இயங்குமென ரெலோ அமைப்பின் பிரமுகர் செ. பத்மநாதன் தெரிவித்தார். (ந)

## மாடிவீடு கொள்வனவு

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபையினர், சபையின் செயற்பாட்டு அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு அதன் பாவனைக்காக, 15 லட்சம் ரூபா பெறுமதியான மாடிவீடு ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளனர்.

இம்மாடி வீடு கொக்குவில் கோணாவளை ஒழுங்கைப் பகுதியில் அமைந்துள்ளது. (செ-103)

## பொதுச்சந்தை திருத்தும் பணிகள் ஆரம்பம்

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட, திருநெல்வேலிப் பொதுச் சந்தையின் மேல் மாடிக்கடைகளின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பூர்த்தியானதும், அவற்றில் முன்னர் தொழில் செய்த வியாபார நிலையத்தினருக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (த-103)

## மண்டான் ச.ச.நிலையம் புனரமைப்பு

(மந்திகை)

மந்திகைப் பிரதேசத்திலுள்ள பாலர்பாடசாலைகளினதும் சனசமூக நிலையங்களினதும் புனரமைப்பு பணிக்காக ஈ.பி.டி.பி கட்சியினர் 50 ஆயிரம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளனர்.

இதனால் நீண்டகாலமாக திருத்தப்படாமல் இருந்த மண்டான் மாவலி சனசமூக நிலையமும் ஜோதிசனசமூக நிலையமும் புனரமைக்கப்படுகின்றன.

இதையிட்டு அப்பகுதிமக்கள் இக்கட்சியினருக்கு தங்களது நன்றியறிதலைத் தெரிவித்துள்ளனர். (த-23)

## சிறுமி மரணம்

(வவுனியா)

மல்லாவி அறுபது வீட்டு திட்டப்பகுதியில் வாந்தி பேதி நோயினால் சிறுமி ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

நிமலராஜா விதுசா (வயது 4) என்ற சிறுமியே வாந்திபேதியினால் உயிரிழந்தவராவார்.

## விஞ்ஞான ஆய்வு கூடம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மகாவித்தியாலய விஞ்ஞான ஆய்வுகூடம், நேற்று முன்தினம் வலி கிழக்கு பிரதேசசபைத் தலைவர் P. குணசிங்கத்தால் திறந்துவைக்கப்பட்டது. (உ)

## சுவரொட்டிகள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் தமிழ்க் கட்சிகளால் ஒட்டப்பட்ட தேர்தல்கால சுவரொட்டிகள் பொலிஸாரினால் மையிடப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை யாழ். நகரை அண்டிய பகுதிகளில் சுயேட்சைக் குழுக்களினாலும் அரசியல் கட்சிகளினாலும் புதிய போஸ்டர்கள் ஒட்டப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். (ந-3)

# பலாலி பயிற்சிக்கலாசாலையின் சான்றிதழ் பெறாதவர்கவனத்திற்கு

[மந்துவில்]

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியினை முடித்து இதுவரை சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளாதவர்களை கலாசாலையின் கடமை நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் கு. சதாசிவமூர்த்தி கேட்டுள்ளார்.

சான்றிதழ் பெறாதவர்களின் பெயர்விபரம் வருமாறு;

### கல்வியாண்டு 1972-73

கெலன் சரோசினிதேவி எட்வேட்
இராசாம்பாள் சிவசுப்பிரமணியம்
இராசேந்திரம் ஜோர்ஜ்
மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை நாரந்தனைவடக்கு, ஊர்காவற்றுறை
மகேஸ்வரி சுப்பிரமணியம் சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்
ஆறுமுகம் ஜெயராசா உடுப்பிட்டி
ஆதர் பாலரத்தின சிங்கம் கென்ஸ்மன் யாழ்ப்பாணம்
இந்திராணி ஜெயவர்தனா
ஐறிஸ் மின்னொலி யோசேப்
சிவரத்தினம் பிறைகூடி சாவகச்சேரி
அமராவதி கனகராசா
பிரான்சிஸ் மீராயா பெர்னாடோ
சிவஞானம் இளம் பூரணம் வேலணை
மேரிபுஸ்பம் பன்கிறாஸ் பெரியவிளான், இளவாலை
வின்சன் யோசிறி லேட்டன் மாட்டின் யாழ்ப்பாணம்
மேரி யுலிற்ரா ஐராங்கன்
கிங்ஸ்லி ஊர்காவற்றுறை
பொன்னையா நடராசா வவுனியா
சோம்பரம் சண்முகசுந்தரம் இல, 35, செங்குந்தாவீதி, திருநெல்வேலி கிழக்கு.
கணபதிப்பிள்ளை ஆறுமுகம்

### கல்வியாண்டு 1977-78

சண்முகம் தயானதேவ 118, அம்பலவாணர் வீதி, யாழ்ப்பாணம்
சுப்பிரமணியம் யோகநாதன் அச்சுவேலிதெற்கு. அச்சுவேலி
ஜேம்ஸ் கொட்பிற் புஸ்பராஜா
கந்தையா ரவீந்திரன் வேலணைகிழக்கு, வேலணை
நடேசு சிவநாதன் கனுக்கேணி மூள்ளியவளை
புவனேஸ்வரி பரமேஸ்வரன் திருவக்கை, நுணாவில், கரவெட்டி
சிவசோதி சிவசம்பு உடுவில், சுன்னாகம்
ரஜினி சிறியோகநாதன் பரஞ்சோதி வில்ல, ஆனைக்கோட்டை வடக்கு
ஞானம்பாள் ஜெகராஜா 48, சபாபதிறோட், கொக்குவில்
சியாமளா கதிரவேலு 3ம் மைல் கட்டை, கண்டி றோட், யாழ்ப்பாணம்
லலிதாம்பிகா மயில்வாகனம் 65, அம்மன் வீதி, யாழ்ப்பாணம்
தனலட்சுமி செல்லத்துரை அல்வாய் வடக்கு, அல்வாய்
சகுந்தலா சிவராஜா 21/4, 3 ம் ஒழுங்கை, கந்தர்மடம்
வினோதினி சோமநாதர் 26, சோமசுந்தரம் அவென்யூ சுண்டுக்குளி
விஜயலக்சுமி வேலுப்பிள்ளை 121, பிரதான வீதி, கல்முனை
அந்தோனி எமானுவல் வாஸ் -
நடராஜபிள்ளை ஜெயராஜன்
சிவபாக்கியம் கிருபானந்தம்
கந்தையா சோணலிங்கம் பிரதான வீதி, கரவெட்டி
தங்கராஜா சிற்சபேசன் தண்ணீரூற்று, முள்ளியவளை
குமாரசாமி சோமசுந்தரம்
அருணாசலம் தனபாலசிங்கம் மாப்பனாபுரி, காரைநகர்
பரமநாதன் ராமச்சந்திரன் 719/ஏ இ.வை எஸ், வட்டக்கச்சி, கிளி
திலகேஸ்வரி கந்தசாமி பத்தமேனி, அச்சுவேலி
தர்மலிங்கம் பாலசுப்பிரமணியம் தனலக்சுமி பதி. மயிலிட்டி தெற்கு. தெல்லிப்பளை
இராமலிங்கம் நடராஜா கங்காதரன் அளவெட்டிதெற்கு. அளவெட்டி
பாலசுப்பிரமணியம் குமார சிறிதரன் காட்டுவளவு, வல்வெட்டித்துறை
சந்தியோ அந்தோனிப்பிள்ளை சவெயின்ஜேம்ஸ் 173, குருக்குவீதி, பாசையூர், யாழ்ப்பாணம்
சரவணமுத்து சிறிரஞ்சன் சிறிமதிவாசாசுதுமலை மத்தி, மானிப்பாய்
கணபதிப்பிள்ளை தர்மகுலிங்கம்
அரன்விஸ்வலிங்கம்

(நாளை தொடரும்) (த-32)

# முன்பள்ளிஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு

''மிகவும் வசதி குறைந்த பாலர்களும், ஏனைய பாலர்கள் போன்று, முன்பள்ளிகளில் கல்விகற்றுப் பயன்பெற உதவுமுகமாக, 2001 ஆம் ஆண்டில், தமது சபைநிதியில் இருந்து, முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புப்படி கொடுப்பனவை வழங்குவதென'' நல்லூர் பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட சனசமூக நிலைய முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெறவுள்ளனர், எனத் தெரியவந்துள்ளது. (த-103)

# மனிதஉரிமைகள் ஆணைக்குழு விரைவில் கைதிகளை பார்வையிடும்

(யாழ்ப்பாணம்)

மனிதஉரிமைகள் ஆணைக்குழுவினால் வாரந்தோறும் கைதிகளை சென்று பார்வையிடும் செயற்பாடு அடுத்த வாரமளவில் மேற்கொள்ளப்படலாம்என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்தமாதத்தில் மனித உரிமை ஆணைக்குழுவினரின் வாகனம் பழுதடைந்ததினால் கடந்த சிலவாரகாலமாக இச்சேவை தடைப்பட்டிருந்தது. தற்போது வாகனத்திற்கான உதிரிப்பாகம் கொழும்பிலிருந்து பெறப்பட்டுள்ளதைத்தொடர்ந்துதிருத்துதல்பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

இதையடுத்து வெகுவிரைவில் கைதிகளை சென்றுபார்வையிடும்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-12)

# இலவசக் கல்வி எச்சந்தர்ப்பத்திலும் நிறுத்தப்பட மாட்டாது

(கொழும்பு)

நாட்டில், இலவசக் கல்வி முறை எந்தவொருசந்தர்ப்பத்திலும் நிறுத்தப்படமாட்டாதென கல்வி உயர் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன உறுதியளித்துள்ளார்.

உலக வங்கியின் அறிவுறுத்தல்களுக்கமைய இலவசக் கல்வியை இல்லாதொழிக்கும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டிருப்பதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை மறுக்கும் விதமாகவே அமைச்சர் மேற்படி உறுதிப்பாட்டினை வழங்கியுள்ளார்.

இதுதொடர்பாக கல்வி அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பாலர் கல்வி தொட்டு உயர் கல்வி வரையில் மாணவர்களுக்கு மேலும் இலவச சலுகைகளை வழங்கி, அவர்களது கல்வி மேம்பாட்டுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதே இன்றைய அரசின் நோக்கம் என்றார். [உ]

## சிறப்பாக நடைபெற்றது

கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி ஆலயத்தின், ''ஸ்ரீதேவிபூதேவி சமேதமகாவிஷ்ணு'' ''ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்பாள்'' ஆகிய பரிவாரமூர்த்திகளின், நூதன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேக விழா அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. [த-103]

ஒன்றாய் இன்றும் நாமில்லையேல்
விடுதலை என்றும் எமக்கில்லை
செயலதிபர் க. உமாமகேஸ்வரன்

ஒற்றுமையை வளர்த்திட அதன் சின்னமாய்
விளங்கும் எம்மை ஆதரித்திடுவீர்!

X

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம். ஜனநாயக மக்கள் விடுதலைமுன்னணி
(1689)
(புளொட் — ஈரோஸ்)

## சகல எம்.பிக்களும் தம்மிடமுள்ள துப்பாக்கிகளை ஒப்படைக்க வேண்டும்

(கொழும்பு)
சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்வரும் 14ந் திகதிக்குப் பின்னர் தம்மிடமுள்ளதுப்பாக்கிகளை பொலிஸில் ஒப்படைக்க வேண்டுமென பொலிஸ்மா அதிபர் கேட்டுள்ளார்.

நீதியான தேர்தல் இடம்பெறுவதற்கு எம்.பிக்கள் தம்மிடமுள்ள துப்பாக்கிகளை ஒப்படைப்பது மிகவும் அவசியமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தனது பதவிக்காலத்தில் 4 தொடக்கம் 8 துப்பாக்கிகளை வைத்திருக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந)

## பஸ் பற்றாக்குறையை போக்கவும்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் தற்போது பயணிகள்போக்குவரத்துசேவையில் 81 பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபட்டுள்ளது.

இவை மக்களுடைய முழுமையான பிரயாணவசதிகளுக்கு போதுமானதாக இல்லையென வடபிராந்திய போக்குவரத்து முகாமையாளர்ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் எடுத்துக்கூறினார்.

மொத்தமாக உள்ள 105 பஸ்வண்டிகளில் 24 பஸ்வண்டிகளை இராணுவத்தினர் தமது தேவைக்காக எடுத்துள்ளனர். இதனால் பிரயாணிகளின் போக்குவரத்துச் சேவையை முழுமையாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையால் மேற்கொள்ள முடியவில்லை.

எதிர்வரும் பொதுத்தேர்தல் கடமைகளுக்கும் வழமையான பிரயாணிகள்சேவைக்கும் தற்போதுள்ள பஸ்வண்டிகளின்எண்ணிக்கை போதாமல் இருப்பதாகவும் அங்கு சுட்டிக்காட்டப்பட்டது. (வ3-12)

## வாக்காளர் கைக்கொள்ள வேண்டிய விதிமுறைகள்

(யாழ்ப்பாணம்)
ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் பங்கு கொள்ளும் வாக்காளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சில நடைமுறைகளை யாழ்.செயலக வட்டாரங்கள் அறிவுறுத்தியுள்ளது.

அதன் பிரகாரம் வாக்காளர் தாம் விரும்பும் கட்சியின் சின்னத்திற்கு எதிரே புள்ளடியிடுவதுடன், அதன் கீழுள்ள அக்கட்சி வேட்பாளர்களது இலக்கங்களில் விருப்பு அடிப்படையில் மூன்று இலக்கங்களுக்கும் புள்ளடியிட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாக்காளர்களுக்கு பெருமளவு வாக்கு போடுவது தொடர்பாக போதிய அறிவின்மையால், தனியே இலக்கங்களுக்கு மட்டுமே புள்ளடியிடுகின்றனர்.

இவ்வாறு கட்சியின் சின்னத்திற்கு புள்ளடியிடாது, அக்கட்சி வேட்பாளர்களது இலக்கங்களுக்கு மட்டும் புள்ளடியிடும் பட்சத்தில் அவ்வாக்கு நிராகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், இதற்கு முன்பு இடம்பெற்ற தேர்தல்களின், இது தொடர்பான போதிய விளக்கமின்மையால் பல வாக்குகள் நிராகரிக்கப்பட்டதாகவும், அதனைத் தவிர்க்கும் வகையில் இம்முறை பொதுமக்கள் போதிய விளக்கம் பெறும் வகையிலேயே இவ் அறிவுறுத்தல் வெளியிடப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (உ-3)

## நாளொருவண்ணம் அதிகரிக்கும் தேர்தல் கால வன்முறைகள்

(கொழும்பு)
பாராளுமன்றம் கலைக்கப்பட்டு நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட பின் நாடுபூராகவும் நேற்றுவரை 178 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்குமே கூடுதலான வன்முறைச்சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும ஏனைய கட்சிகள் பற்றி குறைவான முறைப்பாடுகளே பதியப்பட்டதாகவும் பொலிஸ் திணைக்களம் மேலும்தெரிவித்துள்ளது. (வ)

## சுவரொட்டிகளை அகற்றுவதில் வவுனியா பொலிஸார் தீவிரம்

(வவுனியா)
வவுனியா நகரில் தேர்தல் சுவரொட்டிகளை அகற்றும் பணியில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

தொலைபேசி மின்சாரக் கம்பங்களில் கட்டப்பட்ட தேர்தல் பதாதைகளும், பொலிஸாரால் அகற்றப்படுகின்றன.

போக்குவரத்துச் சபை பஸ்வண்டிகளில் ஒட்டப்பட்டுள்ள அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்களின் தேர்தல் சுவரொட்டிகளையும் அகற்றும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்

இதேவேளை சகல அரசியல் கட்சிகளும் தேர்தல் பிரச்சார வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அபேட்சகர்கள் வீடுவீடாகச் சென்று வாக்குக்கேட்டு வருவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (வ)

## வன்னியில் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 250 ரூபா

(தென்மராட்சி)
வன்னியில் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மருந்து வகைகளுக்குப் பெரும்தட்டுப்பாடுநிலவிவருவதாகத்தெரிய வருகின்றது.

இதன்காரணமாக மல்லாவி கிளிநொச்சி வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வரும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

அத்துடன் இங்குஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 250 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் அறியப்படுகின்றது.

அதேவேளை தென்மராட்சியில்இருந்து இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்றுள்ள ஆயிரத்து இரு நூறு குடும்பங்களுக்கு இதுவரை இடம்பெயர்தோருக்கான உலர் உணவு நிவாரணங்கள் வழங்கப்படவில்லைஎன்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-77)

# கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2000

## விவசாயம்

### மாதிரி வினாத்தாள் - 1 பகுதி - I

ஆக்கம்: சனக்குமரன்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

21) தாவர நோயின் ஒரு குணம் குறியாகிய அழுகலிற்கு முக்கிய காரணியாக விளங்கும் நுண்ணங்கி
(1) பற்றீரியா (2) வைரசு (3) பங்கசு (4) வட்டப்புழு

22) வயலை நன்றாக பயன்படுத்தாமல், மண் அரிப்புக்கும் இடம் அளிக்காமல் சீராக நீர் வழங்கும் நீர்பாசன முறை எது?
(1) வரம்புகளும், உழவு சாலிகளும் (2) வளையம்
(3) வடிநிலம் (4) தெளிப்பு

23) மாற்றி நடமுடியாத நாற்றுக்களை வெற்றிகரமாக வளர்ப்பதற்கு பொருத்தமான நாற்றுமேடை?
(1) நெரிடோக்கோ (2) மணல் நாற்றுமேடை
(3) டபொக் நாற்றுமேடை (4) பொடி நாற்றுமேடை

24) மண்ணில் காணப்படும் வட்டப்புழுவைக் கட்டுப்படுத்தக் கூடிய பதார்த்தம் எது?
(1) காலிளாய் (2) வேப்பம் பிண்ணாக்கு
(3) மஞ்சள் தூள் (4) சுண்ணாம்பு

25) தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்?
(1) கண்டி (2) அகலவத்தை
(3) தலவாக்கொல்லை (4) பண்டாரவளை

26) பாசிப்பயறு, கடலை முதலியவற்றை பயித்தம் வண்டு தாக்காது பாதுகாக்கும் முறை?
(1) வேப்பெண்ணெய் பூசல் (2) புகையிலைச்சாறு பூசல்
(3) நிலக்கடலை எண்ணெய் பூசல் (4) தேங்காய் எண்ணெய் பூசல்

27) கீழே தரப்பட்ட எந்த உணவுத் தொகுதியில் புரத கூடிய சதவீதத்தில் அடங்கியுள்ளது?
(1) இறுங்கு, குரக்கன், சாமை
(2) உருளைக்கிழங்கு, வத்தாளைக்கிழங்கு
(3) புடோல், கோவா, தக்காளி
(4) கவுப்பி, பயறு, கடலை

28) பாடசாலைப் பண்ணையில் உள்ள விவசாய உபகரணங்கள் தொடர்பான விபரங்கள் பதியப்படும் ஏடு?
(1) பொருட்பதிவேடு (2) வரவு செலவு பதிவேடு
(3) பயிர்ச் செய்கைத் தாள் (4) காசேடு

29) இலங்கையில் நடைமுறையிலுள்ள பின்தங்கிய விவசாய முறை ஒன்று?
(1) ஒன்றிணைந்த விவசாயம் (2) விலங்கு பயிர் பரிமாற்றம்
(3) சேனைப் பயிர்ச் செய்கை (4) சுழல் முறைப் பயிர் செய்கை

30) சுற்றாடலின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படாதவாறு நடைமுறைப்படுத்தக் கூடிய பீடைக் கட்டுப்பாட்டு முறையொன்று தருக?
(1) உயிரியல் முறை
(2) இரசாயண பொறிகளின் பாவனை
(3) ஒன்றிணைந்த பீடைக்கட்டுப்பாடு
(4) இரசாயண தூபமாக்கி பயன்படுத்தல்

31) ஐரோப்பிய வர்க்க மாடுகளைக் கொண்ட கூட்டம்?
(1) முரா சிந்தி, காங்கேயன்
(2) ஜேர்சி பிறீசியன், அயர்ஷயர்
(3) ஜேர்சி சிந்தி சகிவால்
(4) சகிவால், தார்ப்பகர், சிற்றி

32) கருப்பந் தரியாத பசுவில் மத இயல்பு எத்தனை நாட்களுக்கு ஒரு தடவை ஏற்படுகின்றது?
(1) 11 நாள் (2) 21 நாள் (3) 28 நாள் (4) 18 நாள்

33) பாலின் நீரை அகற்றி உற்பத்தி செய்யப்படுவது?
(1) தயிர் (2) பால்மா
(3) ஒடுங்கிய பால்மா (4) யோக்கட்

34) அதிகளவு காபோஹைதரேற்று இருக்கும் உணவு;
(1) கோதுமை மா (2) பிண்ணாக்கு
(3) சோயா அவரை (4) மீன் தூள்

35) மாடுகளின் புற ஒட்டுண்ணியாகிய உண்ணியைக் கட்டுப்படுத்துவது?
(1) மன் சொதிப் (2) பிப்பிரசின்
(3) அசந்தோல் (4) பிபீசான்

36) கோழி முட்டை அடைவைக்கப்பட்டு குஞ்சு பொரிப்பதற்கு எடுக்கும் காலம்?
(1) 18 நாள் (2) 30 நாள் (3) 24 நாள் (4) 21 நாள்

37) கோழித் தீனுக்கு அதிகளவு புரதத்தையும் சுமாரான அளவு கனியுப்புக்களையும் பெற்றுக் கொடுக்கும் உணவுக் கூறு எது?
(1) தானியம் (2) மீன்தூள் (3) அரிசித்தவிடு (4) சிப்பித்தூள்

38) குருதி சேர்ந்த கழிச்சல் காணப்படுமாயின் கோழிக்குஞ்சுகளை என் நோய் பாதித்துள்ளது என அனுமானிக்கலாம்?
(1) குரனிக்கற் (2) புள்ளோரம்
(3) தடிமன் (4) கொக்கிடியோசிஸ்

39) வீட்டில் கோழி வளர்க்கவிரும்பும் ஒருவர் கையாளக் கூடிய சிக்கனமான, சுகாதாரமான இலாபகரமான கோழிவளர்ப்பு முறை?
(1) திறந்தவளர்ப்பு முறை (2) பற்றறி முறை
(3) கனகூளமுறை (4) குஞ்சுவதி முறை

40) காலம் தாழ்த்தி இறகு நீர்க்கும் தன்மையும்; பின்னிரைவாக இறகு வளர்ச்சியடையும் தன்மையும் கொண்ட கோழி தொடர்பான கூற்றுக்களில் சரியானது?
(1) இவை கூடுதலான முட்டை இடும் இனம்
(2) இவை குறைவாக உணவை உட்கொள்பவை
(3) இவை குறைவாக முட்டை இடும்
(4) இவை இனப் பெருக்கத்திற்கு ஏற்றவையல்ல;

இன்று ஒரு தகவல்

# மன்னிக்கும் இதயம் எதுவோ அதுவே தேவன் வாழும் இடம்

மன்னிப்பு என்பது ஓர் தெரிந்தெடுப்பு ஆகும். மனிதனால் செய்யப்படவேண்டிய ஒரு முக்கியமான தீர்மானமும் இதுவாகும். மன்னிப்பு என்பது நமது சுயநீதி நியாயம் என்பவற்றுக்கு எதிரிடையாக நம்மை இழுத்துச் செல்கிறது.

மற்றும் போலியான எண்ணங்களை திட்டவட்டமாக வெறுத்துவிடுவதுமாகவும், உயிரற்ற மனநிலையோடு வாழும் வாழ்வை செயலுள்ளதாக உருமாற்றவும் இம் மன்னிப்பால்தான் முடிகிறது.

மன்னித்து வாழும் மனிதனே மண்ணிலும், விண்ணிலும் தேசபக்தியில் நிறைந்தோர் மத்தியில் வாழமுடியும்.

நீ ஒருவரை மன்னிப்பது அவருக்காக அல்ல. உனக்காகவே நீ மன்னிக்கிறாய். காரணம் நீ மன்னித்தால் இறைவனால் உனது பிழைகள் பலவற்றில் இருந்து மன்னிக்கப்படுவாய்.

மன்னிக்க முடியாதவைகளை உன்னால் மறந்துவிட முடியாது. இதற்கு உனக்குள்ளே தெய்வீக செயல் விளைவுகள் உண்டாகவேண்டும்.

மன்னிப்பு என்பது ஒரு நபருக்கும் இன்னொரு நபருக்கும், அல்லது ஒரு தேசத்திற்கும் இன்னொரு தேசத்திற்கும் இடையுள்ள பிரச்சினை என்பதைவிட இறைவனுக்கும் குறிப்பிட்ட நபருக்கும் அல்லது தேசத்திற்கும் இடையே உள்ள பிரச்சினை என்றால் மிகையாகாது.

நீ அடுத்தவரின் பாவத்தினால் உண்டான பின் விளைவுகளுடன் வாழ ஒத்துக்கொளளும்போது உனது மன்னிப்பு மனப்பான்மையின் தரத்தை உச்சமாக எண்ணிவிடலாம்.

மன்னிப்பு இது உனது ஆவி. ஆத்மா, சரீரம் மூன்றும் இணைந்து முற்று முழுதாக செய்கின்ற ஓர் மனிதாபிமான எழுத்தோவியம் அற்ற உடன் படிக்கை ஆகும்.

மன்னிக்கும் மனதைக் கொண்டவன் பூமியில் வேண்டிடும் விருப்பங்களை மலையளவாய் பெற்றிடுவான். மன்னிப்பதால் உண்டாவது உணர்ச்சியின் கிறுகிறுப்பு அல்ல. விடுதலையோடு வாழும் சமாதான மனநிலையாகும் நீ மன்னிக்கப்பட்டாயானால் நீ மன்னித்தே தீரவேண்டும்.

உன்பக்கம் நன்மையுண்டு நீதியுண்டு. ஆனால் உன்மீது அபாண்டமான பழி சுமத்தப்படுகிறது. உனது எதிர் நடவடிக்கைஅல்லது பிரதிபலிப்பு என்ன மாதிரி இருக்கும். தீமையை நீ நன்மையினால் வெல்வதே மன்னிப்பின் மங்காத மாபெரும் உண்மை. மன்னித்துவிடு அப்பொழுது உன்முன் மண்டியிடுவார்கள்.

நிக்சன்

# உப்பு கூட்டுஸ்தாபனஊழியர்களின் சம்பள விடயத்தில் அரசு பாரபட்சம்

[கோப்பாய்]

உப்புக் கூட்டுஸ்தாபன ஊழியர்களின் சம்பள விடயத்தில் அரசு பாரபட்சமாக நடந்துகொள்வதாக அக்கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்;

97 ஆம் ஆண்டுமுதல் எமது ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமை குறித்து பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்துக்கூறிய தன் பேரில் அரைவாசிச்சம்பளம் வழங்குவது தொடர்பாகச் சுற்றுநிருபம் தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளது:

ஏனைய கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு முழுச்சம்பளம் வழங்கும்போது, தமது விடயத்தில மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் அரசு நடந்துகொள்வது ஏன் எனவும் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். [உ-79]

## விசர் நோய் தடுப்பூசி

பருத்தித்துறைப் பகுதி வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி போடும் பணியில்,

இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை புத்தளை சனசமூக நிலையத்திலும், பி. ப. 2.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை உபய கதிர்காம சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி போடப்படும்.

ஒவ்வொரு வரும் தமது வளர்ப்பு நாய்களுக்கு கட்டாயம் விசர் நோய்த் தடுப்பூசி மருந்தை ஏற்றும்படி, பருத்தித்துறைப் பகுதி சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார். (செ-42)

## சனசமூக நிலையம் திறப்புவிழா

[நல்லூர்]

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்டதும், சபையினால் புனரமைக்கப் பெற்றதுமான, கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையம், நாளை மறுதினம் சனிக்கிழமை, நல்லூர் பிரதேச சபைத்தலைவர். க. மணிபல்லவராஜனால் திறந்துவைக்கப்படவுள்ளது.

2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் இச் சனசமூக நிலையம் புனரமைப்புச் செய்யப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். [செ-103]

## விறகிற்கு பெரும் தட்டுப்பாடு

(கோப்பாய்)

குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ் நிலைகாரணமாக விறகிற்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால் விறகு விற்பனையில் ஈடுபடுவோர் தொகையும் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது.

இவ்வியாபாரிகளால் கோப்பாய்ப் பகுதியில் ஆள் நடமாட்டமில்லாதபோது பெருந்தொகையான சிறு மரங்கள் சட்டவிரோதமாக வெட்டப்படுகின்றதாக தெரிவிக்கப்படுகிறது.

காணி உரிமையாளர்கள் தங்கள் காணிகளில் உள்ள பலமரங்கள் வாளால் அரிந்தெடுக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்; (த-79)

## யாழ். மாநகரசபை வீதி திருத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட 30 வீதிகளை திருத்துவதற்கான நிதியினை யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஈ. பி. டி. பி செயலாளர் நாயகமுமான கே. என். டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சேதமடைந்திருந்த யாழ். நவீன சந்தை கட்டிடப் புனரமைப்பிற்கு 'ரான்' அமைப்பின் நிதியுதவியுடன் 30 இலட்சம் ரூபா செலவில் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ந-3)

## வெளியூர்த்தபால்கள் உடைக்கப்படுவதால் பொதுமக்கள் விசனம்

(தென்மராட்சி)

வெளிநாடுகளில் இருந்து குடாநாட்டு முகவரியாளர்களுக்கு அனுப்பப்படுகின்ற தபால்கள் யாவும் உடைக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்ட பின்னரே யாழ்ப்பாணத்துக்கு கப்பல் மூலம் அனுப்பப்பட்டு வருகின்றது.

இது விடயம் குறித்து குடாநாட்டுப் பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தபால் சட்டப் பிரகாரம் முகவரியாளர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் உடைக்கப்படுவதும் மனித உரிமை மீறலான செயல் எனக்கருதப்படுகின்றது. (செ-77)

## சிறப்புடன் நடந்தேறிய சந்நிதி ஆலய உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீண்டகால இடைவெளியின்பின் பழைய கலகலப்புடன் தொண்டைமானாறு செல்வச்சந்நிதிஆலயஉற்சவம் நடந்தேறியுள்ளது.

வழமைநிலை பாதிப்புற்ற பின், அடியார்கள் இரவுத் திருவிழாவில் பங்குகொள்வதை தவிர்த்துவந்த போதிலும், இம்முறை இளைஞர்கள் முதற்கொண்டு பாலர் முதியோர்என பலரும் இரவு தங்கிநின்று பூஜைவழிபாடுகளில் கலந்துகொண்டதை அவதானிக்கமுடிந்தது.

அத்துடன், காவடிகள் மூலம் தங்கள் நேர்த்திக்கடன்களை தீர்த்துவைக்கும் பக்த அடியார்களும் சென்ற வருடங்களைவிட இவ்வருடம் பெருந்தொகையில் கலந்துகொண்டதை காணக்கூடியதாய்இருந்தது. (உ)

## விவசாயிகளின் தற்கொலையை தடுக்க மக்கள் விடுதலை முன்னணியாடுபடும்

### டி. சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

நாம் ஆட்சிக்குவந்தால் விவசாயிகள் எவரும் தற்கொலை செய்துகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள் என மக்கள் விடுதலை முன்னணிச் செயலாளர் டி. சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற மேற்படி கட்சியின் கொள்கை விளக்கக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்போதய ஆட்சியில்உள்ள அரசுகளின் தவறான கொள்கைப் பிரகடனங்களால் விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் கீழ் நிலையடைந்துள்ளது.

இதனால் விரக்தியடையும் விவசாய மக்கள் தற்கொலையை தமது பிரச்சினைகளுக்கான இறுதித் தீர்வாக கருதுகிறார்கள்.

எமது கட்சி ஆட்சிக்கு வந்தால் இந்தநிலையை மாற்றி விவசாயிகளது வாழ்வு மேம்பட புதிய பல திட்டங்கள் அமுல்ப்படுத்துவோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். [உ]

## திருநெல்வேலியில் புதிய கட்டடம்

(நல்லூர்)

திருநெல்வேலிப் பொதுச் சந்தைப்பகுதியில், ஆடியபாதம் வீதியில், நல்லூர் பிரதேச சபையினால், 50 லட்சம் ரூபா பெறுமதியில் கடைத்தொகுதி அமைக்கப்படவுள்ளதாக, நல்லூர் பிரதேச சபைத்தலைவர். க. மணி பல்லவராஜன் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு - புனரமைப்பு அதிகாரசபை வழங்கிய நிதியைக் கொண்டு மேற்படி கடைத்தொகுதி அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். [ந-103]

## கோண்டாவில் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள்

[தென்மராட்சி]

கோண்டாவில் பகுதியில் திருடர்களின் கைவரிசைகள் இரவு வேளைகளில் அதிகரித்துவருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதிகளிலுள்ள இந்து ஆலயங்கள் சிலவற்றுக்குச் சென்ற திருடர்கள் அங்கே வைக்கப்பட்டிருந்த சுவர் மணிக்கூடுகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

இத்தகைய திருடர்களுள் ஒரு சிலர் அப்பகுதி மக்களால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு நையபுடைக்கப்பட்டனர். மேலும் இத் திருட்டுச்சம்பவங்களில் உள்ளூர் வாசிகளே ஈடுபட்டுவருவதாகவும் கூறப்படுகின்றது. (செ-77)

## தபால் மூல வாக்களிப்பு திகதிகளில் மாற்றம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில், தபால்மூல வாக்களிப்புக்கென நிர்ணயிக்கப்பட்ட திகதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 29ஆம் 30ஆம் திகதிகளில், தபால் மூலவாக்களிப்பிற்கான நாட்களாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

தபால் மூலவாக்களிப்பு இறுதித்தினமான 30ஆம்திகதி சனிக்கிழமையாக அமைவதால் அன்றைய தினம் வாக்களிப்பதில் உள்ள அசௌகரியங்கள் குறித்து பலதரப்பில் இருந்தும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து, 28ஆம்29ஆம் திகதிகளில் மேற்படி வாக்களிப்பு இடம்பெறுவது குறித்த உத்தரவினை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா வழங்கியுள்ளார். (உ)

## கும்பாபிஷேகம்

(மண்டைதீவு)

வேலணை தெற்கு தாளையம் பதி ஸ்ரீ சிவசுப்பிரணிய சுவாமி ஆலய சண்டேஸ்வர பெருமான மகாகும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்குரியபூர்வாங்ககிரியைகள் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது. (செ-83)


# சுயேச்சைக்குழு இல-3

(ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவுடன்)

ஒற்றுமை கொண்டு ஒருமனதாக பற்றுக்கொண்டு

வாக்களித்திடுவோம் தொலைபேசிக்கே!



(கி-788)

# ஆபிரிக்காவில் எய்ட்ஸைப் போக்க உலகவங்கி 500 மி.டொலரை வழங்கும்

[ஜெனிவா]
ஆபிரிக்காவில் எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு 500 மில்லியன் டொலர்களை உலகவங்கி கடனாக வழங்கமுன்வந்துள்ளது.

இந்த நிதியிலிருந்து உடனடியாக கென்யா, எத்தியோப்பியா போன்ற நாடுகளில் எய்ட்ஸ் நோய் தடுப்புக்காக 110 மில்லியன் டொலர்களை வழங்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உலகிலுள்ள 84 வீத எய்ட்ஸ் நோயாளர்களில் 24 வீதத்தினர் ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றும் தென்னாபிரிக்காவே உலகில் எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட நாடு என்றும் தெரிவிக்கப்படுகிறது.

15 மில்லியன் மக்கள் இற்றைவரை தென்னாபிரிக்காவில் எய்ட்சினால் இறந்துள்ளார்கள் என்று அண்மைக் கணக்கெடுப்புகள் தெரிவிக்கின்றன. [து]

# ஜம்முகாஷ்மீர் இராணுவ முகாம்மீது தீவிரவாதிகள் அதிரடித் தாக்குதல்

## 12 இராணுவம்; 3தீவிரவாதிகள் பலி

(ஸ்ரீநகர்)
ஜம்மு காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் இராணுவமுகாமை

தீவிரவாதிகள் தாக்கியதில் 12 இராணுவத்தினர் உயிர் இழந்தனர். என்று அறிவிக்கப்படுகிறது.

ஸ்ரீநகரில் உள்ள இராணுவ முகாமிற்குள் நுழைந்த லக்சறி கொயிலாறா என்று அழைக்கப்படும் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த கும்பலொன்று திடீரென தாக்கியது என்றும் அந்தத் தாக்குதலில் கண்மூடித்தனமாக சரமாரியாகச் சுட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத்தாக்குதலில் இராணுவ மேஜர் ஒருவரும் 3 சிப்பாய்களும் கொல்லப்பட்டனர் என்றும்,

இராணுவத்தினர் திருப்பித் தாக்கியதில் மூன்று தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக ஊர்ஜித மற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

லக்சறி இவ் அதிரடி தாக்குதலை கொயிலாறா தீவிரவாதத் தற்கொலைப்படை தான் செய்ததென்றுஇராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (து)

# மொரிஸியஸ் பிரதமர் தேர்தலில் தோல்வி

(மொரிஸியா)
மொரிஸியசின் பிரதமர் ரங்கோலன் பொதுத்தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் நடந்த மொரிஸியஸ் பாராளுமன்றத் தேர்தலில் பிரதமர்ரங்கோலனின் கட்சி அதிகப்படியான இடங்களில் தோல்வியைத் தழுவிக் கொண்டது.

62 இடங்களில் பெரும்பான்மை வலுவை இழந்த ரங்கோலனின் கட்சிதனது தோல்வியையொப்புக் கொண்டது.

இதனையடுத்து புதிய ஆட்சியை வெற்றியீட்டிய எதிர்க்கட்சியினர் அமைப்பார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது

அரசியலில் அமைதிபேணப் படுகின்ற நாடுகள் வரிசையில் மொரிஸியசும் ஒன்று என்பதும் நோக்கர்களின் கணிப்பு. (து)

# பத்திரிகையாளரிடம் காந்தி கேட்ட கேள்வி

(புதுடில்லி)
மகாத்மா காந்தி பிரித்தானியாவிலிருந்து இந்தியா திரும்பிய பொழுது அவரை பத்திரிகையாளர்கள் சூழ்ந்து கேள்விக்கணைகளைத் தொடுத்தார்கள்

அவ்வேளை ஒரு பத்திரிகையாளர் ஆங்கிலத்தில் கேள்வி ஒன்றைக் கேட்டார். அதற்கு மகாத்மா காந்தி சகோதரனே நாமிருவரும் இந்தியர்கள். இருவர் தாய் மொழியும் குஜராத்தி. நான் தென்னாபிரிக்காவில் வாழ்ந்து விட்டுத் திரும்பியுள்ளதால் தாய் மொழியை மறந்திருப்பேன் என்று நினைத்தாயா? அல்லது ஒரு பரிஸ்டரிடம் ஆங்கிலத்தில் பேசினால் தான் பெருமையாக இருக்குமென நினைத்து ஆங்கிலத்தில் பேசினாயா? என்று கேட்டார். [து]

# போலி மருந்து உற்பத்தியில் உஸ்பெக்கியர் 4 பேர் கைது

[புதுடில்லி]
டில்லியில் போலி மருந்து தயாரித்த கும்பல் ஒன்று பிடிபட்டது என்று பொலிஸ் பகுதியைச் சேர்ந்த உதேஷ் பிரகாஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பெருந்தொகையான மருந்து வகைகள் கைப்பற்றப்பட்டன என்றும் இவைகள் இரகசிய தகவலின் அடிப்படையில் உஸ்பெஸ்கிஸ்தானைச் சேர்ந்த 4 பேரைக் கைது செய்ததாகவும் இதேவேளை இன்னொரு இந்தியரையும் கைது செய்ததாகவும் தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட மருந்து வகைகளடங்கிய பெட்டிகளில் ரஷ்யாவிலிருந்து சென்ற அரசுகளின் மொழிகள் உட்பட ரஷ்ய உஸ்பெக் மொழிகள் பொறிக்கப்பட்டிருந்தன வென்றும் இவைகள் கூடுதல் விலைகளுக்கு விற்கப்பட்டன என்றும் தெரிவித்தார். (து)

# கிருமிநாசினி பாவனையால் "மறதி" அதிகரிக்கிறது

## நெதர்லாந் விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

கிருமிநாசினி மற்றும் பூச்சி கொல்லிகளின் பாவனைகளால் மனிதர்களின் நினைவாற்றல் குறைவதாக நெதர்லாந் விஞ்ஞானிகள் தமது அண்மைக்கால ஆய்வுகளில் நிரூபித்துள்ளார்கள்.

விவசாயத்தின்போது பயிர்களை பூச்சித் தாக்கங்களில் இருந்து பாதுகாப்பதன் பொருட்டு இக்கிருமி நாசினிகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஆனால் அவை விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுககும் பெரும் மறைமுகத் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்றும் அவ்ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# கச்சாய் எண்ணெய் விலை அதிகரிப்பு ஐரோப்பிய நாடுகளில் எதிர்ப்பு அலை

[லண்டன்]
கச்சாய் எண்ணெய் விலை அதிகரிப்பு, ஐரோப்பிய நாடுகளில் பலவற்றில் பெரும் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது.

எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் உற்பத்தியை அதிகரிப்பதாக அறிவித்திருந்த போதிலும், உலகச் சந்தையில் கச்சாய் எண்ணெய் விலை மேலும் அதிகரித்துள்ளது.

இதனையெதிர்த்து, பிரிட்டன், ஜேர்மன் ஆகிய நாடுகளில் பெரும் ஆர்ப்பாட்டங்களும், எதிர்ப்பு நடவடிக்கைகளும் இடம் பெற்று வருவதாக தெரியவந்துள்ளது.

இவ் எதிர்ப்பு நடவடிக்கைகளால் அந்நாட்டு அரசுகள் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கியிருப்பதுடன், மாற்று நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்துள்ளன. [உ

# இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு அமெரிக்காவில் சத்திர சிகிச்சை

[வாஷிங்டன்]
நேற்று நியூயோர்க்கில் பிரதமர் வாஜ்பாய்யின்



உடலைப்பரிசோதித்த எலும்பு மருத்துவ நிபுணர் அறுவைச்சிகிச்சைக்குப் பரிந்துரைத்துள்ளார்.

புத்தாயிரம் ஆண்டின் ஐ.நா. சபைக் கூட்டத்தில் உரையாற்றச்சென்றுள்ள இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் மூட்டுவலி காரணமாக தாமதித்தே நியூயோர்க்சென்றார், அங்கும் பொது அரசவை பவங்களிலும், மற்றும் கூட்டங்களிலும் கலந்து கொள்வது முடியாதிருந்தது.

கடந்த சிலமாதங்களாக இந்தியாவில் நடைபெற்ற அரசவைபவங்களில் கலந்து கொள்வதை வாஜ்பாய் தவிர்த்து வந்தார்.

அமெரிக்காவிலுள்ள எலும்பு மருத்துவ நிபுணர் சித்திரிங்கன் ஜனாவின் பரிந்துரையின் படி பிரதமர் வாஜ்பாய்க்கு அறுவைசிகிச்சை நடைபெறும் என்றும் அந்தஅறுவைசிகிச்சை அநேகமாக நியூயோர்க்கில் மருத்துவ நிபுணர் மேற்பார்வையின் கீழ் நடைபெறலாமென்றும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (து)

# குஜராத்தில் நில நடுக்கம்

(புதுடில்லி)
குஜராத்திலும் மத்தியப் பிரதேசத்தின் சில பகுதிகளிலும் நேற்று முன்தினம் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இலேசாக ஏற்பட்ட இந்த நில நடுக்கத்தில் எந்த வித பாதிப்புகளும் ஏற்படவில்லை என்றும் இதேவேளை மகாராஷ்டிரத்திலும் கடந்த திங்கள் இலேசன நில நடுக்கம் ஏற்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது. (து)

# பீஹார் மாநிலத்தில் படுகொலை

இந்தியாவின் பீஹார்மாநிலத்தில் இடம் பெற்ற வகுப்பு மோதல்களில் 6பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

உயர் வகுப்பினர் என தம்மைக் கூறிக்கொள்ளும் ஆயுதக்கும்பல்களே இப்படுகொலைகளைச் செய்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

இதேவேளை, படுகொலை செய்யப்பட்டவர்கள் சிலரது சடலங்கள் இன்னமும் மீட்கப்படாது இருப்பதாக தெரியவந்துள்ளது. (உ)

# கிரிக்கெட் ஊழல்விவகாரம் இந்தியகிரிக்கெட்பயிற்றுனர் கபில்தேவ் இராஜினாமா

இந்திய கிரிக்கெட்அணியின் முன்னாள் கப்டனும் இந்நாள் பயிற்றுவிப்பாளருமான கபில்தேவ் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் தேசிய தெரிவுக் கமிட்டித்தலைவர் ஏ.சி முத்தையா இவரது இராஜினாமாவை ஏற்றுக் கொண்டிருப்பதாக அறிவித்துள்ளார்.

இதனையடுத்து அடுத்த மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நைரேபிகிரிக்கெட் தொடரில் பங்குகொள்ளும் வீரர்களுக்கு புதிய பயிற்றுவிப்பாளர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

உலகிலேயே ஒருநாள் போட்டிகளில் அதிகவிக்கட்டுக்களை வீழ்த்தியவர்என்ற பெருமையையும், 1983 உலக கோப்பை கிரிக்கெட்தொடரில் இந்தியாவின் பெருவெற்றிக்கு காரணமானவர் என்ற புகழையும் பெற்றிருந்த கபில்தேவின் பதவிவிலகல் கிரிக்கெட் ரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதேசமயம்,

இலங்கையில் இடம்பெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான சிங்கர்கோப்பை இன்னப் போட்டியில், இந்திய அணியைச்சேர்ந்த மனோஜ்பிரபாகருக்கு 25 இலட்சரூபா இலஞ்சம்வழங்கி, அவருடைய திறமைக்கும் குறைவாக விளையாடுமாறு பணித்தார்என்ற குற்றச்சாட்டின் எதிரொலியாகவே கபில்தேவின் இராஜினாமா அமைந்திருக்கலாமென கிரிக்கெட்அவதானிகள் ஊகம் தெரிவித்துள்ளனர். (உ)

# இந்தியாவுடன் போரிடுவதற்கு பாகிஸ்தான் தயாராகவேயுள்ளது

## இராணுவ ஆட்சியாளர் முஷாரப்

(இஸ்லாமபாத்)
இந்தியாவுடன் போரிட்டு தமது உரிமைகளை வென்றெடுக்கத் தயாராகஇருப்பதாக பாகிஸ்தான் ஆட்சியாளர் பெர்வேஷ் முஷாரப் கூறியுரைத்துள்ளார்.

அண்மையில் தலைநகர் இஸ்லாமபாத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் பேசும்போது இராணுவ ஆட்சியாளர் முஷாரப் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவுடனான போர் ஏற்பாடுகளில் பலமாதங்களாகவே தமதுதரப்பு ஈடுபட்டுவருவதாகவும். போர் ஒத்திகைகளில் தம்நாட்டுப் படையினர்தீவிரமாக இறங்கியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நியூயோர்க்கில் இடம்பெற்ற புத்தாயிரமாண்டில் உச்சிமாநாட்டின் போது இந்தியாவுடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட முஷாரப் விருப்பம் தெரிவித்தபோதிலும், தற்போதைய அறிவிப்பு பெரும்புதிராக இருப்பதாக அரசியல் நோக்குநர்கள்பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேசமயம், அமெரிக்கப் பயணம் மேற்கொண்டுள்ள இந்தியப்பிரதமர் வாஜ்பாய் அந்நாட்டு அதிபருடன், பாகிஸ்தானின் எல்லைப் பயங்கரவாதம்பற்றிய விரிவான பேச்சுக்களில் ஈடுபடுவார்என அறிவிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

வாணிகஞ் செய்வார்க்கு
வாணிகம் பேணிப்
பிறவும் தம்போற் செயின்

- குறள் -

# வலம்புரி

## வணிகர் கழகம்

வங்கம் செலுத்தி வளமார் பொருளீட்டி எங்கும் எவர்க்கும் துணைக்கரம் நீட்டும் வணிகர் கழகம் தமக்கென நிரந்தர கட்டடம் ஒன்றைத்தேடி இருக்கிறார்கள் தங்களிடையே தகவானஒற்றுமைதழைத்திருப்பதை அச்செயற்பாடு காட்டி நிற்கிறது ஈழநாடு எழுத்துப் பணியாற்றிய திருவிடம் அது இடர்படும் மக்கள் இன்னல் துடைக்க காலத்தின் தேவைக்குச் சேவை செய்ய முனைந்து நிற்கும் வணிகர் கழகத்திற்கு வாய்ப்பான இடம். தினகரன் எழுகின்ற குண திசையைப் பார்த்த வண்ணம் எழுந்து நிற்கும் கழகக் கட்டடம் அபய கரம் நீட்டும் அரன் போல அமைந்துள்ளது சிறப்பேயாம்.

நெஞ்சை அள்ளும்சிலப்பதிகாரத்திலே வணிகர்கள் புகழ் பேசப்படுகிறது. ஒரு நாட்டின்செழுமைக்கு வித்திடுபவர்கள் வணிகப் பெருமக்களே. இன்றைக்கு இன்னல்ப்பட்டு இருக்குமிடமின்றி பராரியாய் அலையும் மக்கள் நியாய விலையில் பொருள் வாங்கவும், அத்தியாவசிய உணவுப் பொருள்களைத் தட்டுப் பாடின்றிப் பெற்றுக் கொள்ளவும் துணை நிற்பவர்கள் வணிகர்களே.

காலத்துக்குக்காலம்ஏற்படும் பெரு நட்டங்களை ஒன்று பட்டு நின்று குரல் கொடுப்பதால் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை இக்கழகத்தின் கட்டுக் கோப்புகொடுக்கவல்லது. மக்கள் தேவையுணர்ந்து, பொருள் தட்டுப்பாடு

# தனிப்பெரும்பான்மை என்ற பதம் உரிய கருத்தைத் தருமா?

## முனைவர் - மு. பதம்பார்ப்பான்

மக்களாட்சி முறையில், இருபான்மை, பெருமபான்மை என்ற எண்ணக்கருக்கள் முக்கியமானவை பெரும்பான்மைகள் பல விதம் தனிப்பெரும்பான்மை' அறுதிப் பெரும்பான்மை, மூன்றில் இரண்டு பெரும்பான்மை, சாதாரண பெரும்பான்மை என்றெல்லாம் அவற்றைப் பாகுபடுத்திப் பார்ப்பதுண்டு.

'நமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை; பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றுவோம்; தனிப் பெரும்பான்மையைவைத்துக் கொண்டே யாப்புச் சீர்திருத்தங்களை நிறைவேற்றுவோம் என்று ஜனாதிபதி தெரிவித்தார்' — இவ்வாறு செய்தி ஊடகமொன்று அண்மையில் அறிவித்தது.

இந்த இடத்திலே 'தனிப் பெரும்பான்மை' என்னும் பதம் உரிய கருத்தைத் தருகிறதா? பொருத்தமாக உள்ளதா? சற்று நின்று உற்றுப் பார்ப்போம்.

ஓர் அவையிலே அல்லது மன்றத்திலே ஒரு தீர்மானத்துக்கு ஆதரவாய் வாக்களிப்போரின்எண்ணிக்கை அதனை எதிர்த்து வாக்களிப்போரின் எண்ணிக்கையை விட அதிகமாக இருந்தால், அந்தத் தீர்மானம் வெல்லும்; இல்லையானால் அது தோற்கும்; சாதாரணமான தீர்மானங்கள் ஒரேஒரு வாக்கினாலே கூட நிறைவேறக் கூடும். ஆனால், முக்கியமான சில வகைத் தீர்மானங்களுக்கு, உறுப்பினரில் 2/3 பங்கினரின் ஆதரவு தேவை என்று விதிக்கப்படலாம்; அல்லது, குறித்த நிறுவனத்தின் அமைப்பு விதிகளின்படி, வேறுயாதுமொரு பின்னம் குறித்துரைக்கப்படலாம்.

குறைந்தபட்சம்ஒரேயொரு வாக்குப் பெரும்பான்மையினால் நிறைவேற்றப்படக் கூடிய தீர்மானங்கள் சாதாரண பெரும்பான்மை பெற்று நிறைவேறுகின்றன' என்று கூறுகிறோம். சாதாரண பெரும்பான்மையை 'வெறும் பெரும்பான்மை' என்றும் சொல்லலாம்; இதையே சிம்ப்பிள் மஜோறிற்றி' என்பர்.

ஆனால் 'தனிப்பெரும்பான்மை' என்பது வேறு பொதுத் தேர்தல்களிலே, பல கட்சிகள் போட்டி இடுகின்றன. இவற்றிலே தனியொரு கட்சி வேறொரு கட்சியின் உதவியும் இல்லாமல் ஆட்சியைக் கைப்பற்றக் கூடிய பெரும்பான்மை வலுவை ஈட்டிக் கொள்ளலாம். அப்படிப்பட்ட பெரும்பான்மையைத் 'தனிப்பெரும்பான்மை என்று குறிப்பிடலாம். இதை 'ஜப்சொல்யூற் மஜோறிற்றி' என்பர். 'தனி' என்பது வேறொன்றிலும் தங்கியிராது தனித்து நிற்பது எனப் பொருள்படும்.

பல கட்சி ஆட்சி நிலவும் நாடுகளின் ஆட்சிமன்றுகளிலே சில வேளை எந்த ஒரு கட்சிக்கும் தனிப்பெரும்பான்மைஇல்லாமற்போகக் கூடும். ஆனால் ஒத்த கருத்துடைய கட்சிகள் சில ஒன்றிணைந்துஓர் ஐக்கிய முன்னணியை அமைத்துக் கொள்ளலாம். அந்த ஐக்கிய முன்னணியை ஒரு முழு அலகாகக் கணிக்கும் போது, அந்த முன்னணியில், சில வேளை, எதிர்க்கட்சியினரை விட அதிகமான தொகையில் உறுப்பினர்கள் இருக்கக் கூடும். அந்த நிலையில், அந்த ஐக்கிய முன்னணியினைத் தனிப் பெரும்பான்மை' உடையதென்று குறிப்பிடுவது சரியாக இருக்கும்.

ஆனால் ஆட்சிமன்றில் நிறைவேற்றப்படும் சட்ட மூலங்களிற் சில, அதிமுக்கியமானவை; அரசினரின் அடிப்படைக் கொள்கையுடன் தொடர்புடையவை; எடுத்துக்காட்டாக, வரவு செலவுத் திட்டம் என்னும் நிதி அறிக்கைஅப்படிப்பட்ட சட்ட மூலங்களில் ஒன்றாகும். இத்தகைய சட்ட மூலங்கள் நிறைவேற்றத்தான் 2/3 பெரும்பான்மை தேவை என்பது போன்ற நியதி இருப்பது வழக்கம். அரசமைப்பு விதிகளைத் திருத்துகையிலும் 2/3 பெரும்பான்மை தேவைப்படுவது வழக்கம் இவை எல்லாம் அவ்வவ் நிறுவனங்களின் அமைப்பு விதிகளில் வரும் நிபந்தனைகள் ஆகும்.

இனி அறுதிப் பெரும்பான்மை என்னும்தொடரை நோக்குவோம். 'அறுதி' — என்பது யாது? எந்த ஒரு சாரியத்தையும் பிசகில்லாது, முடிந்த முடிவாக நிறைவேற்றுவதை 'அறுதி' சுட்டி நிற்கிறது ஈடாகவோ ஒற்றியாகவோ பெற்றுக் கொள்ளாமல் முழு விலையையும் செலுத்தி வாங்கும் காணியை அறுதியாக வாங்கின காணி' என்று குறிப்பிடுகிறோம். அதுபோலவே அறுதிப்பெரும்பான்மை என்பது குறிப்பிட்ட விடயம் பற்றி முடிவெடுப்பதற்கு தேவை என்று விதிக்கப்பட்ட விகிதப்படியுள்ள பெரும்பான்மை; என்பதை நாம் விளங்கிக் கொள்வது நல்லது:

எனவே பெரும்பான்மையின் வகைப்பாடுகளைப் பின்வருமாறு நாம் வரையறுத்துக் கொள்ளலாம் —

அ) வெறும்பெரும்பான்மை — இதுவேசாதாரண பெரும்பான்மை; இது ஒரு வாக்கு வித்தியாசத்தால்வரும்பெரும்பான்மையைக் கூடக் குறிக்கும்;

ஆ) 'தனிப்பெரும்பான்மை' — தனியொரு கட்சியோ ஐக்கிய முன்னணியோ ஈட்டிக் கொள்ளும் பெரும்பான்மை;

இ) 'அறுதிப் பெரும்பான்மை' — குறிப்பிட்டதொரு விடயத்துக்குக் கட்டாயமாகத் தேவைப்படும் பெரும் பான்மை 2/3 பெரும்பான்மையும் அறுதிப் பெரும்பான்மை என்னும் வகுப்பினுள் அடங்குவதே ஆகும். இது கவனிக்கத்தக்கது.

# சுயலாபம் கருதாது மக்கள் சேவை புரிந்தவர்கள் யாழ். வணிகர்கள்

## டக்ளஸ் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

தொடர்ச்சியான யுத்தமும் அதனால் விளைந்த இடப்பெயர்வுகளும் எமது மக்களை பெரும் பொருளாதார பின்னடைவுகளுக்கு இட்டுச்சென்றது.

அந்தவேளையில் எமது மக்களை அழிவுப்பாதையினின்றும் திசைமாற்றி கைகொடுத்து அழைத்துச் சென்றவர்கள் யாழ்ப்பாண வணிகர்களே.

யாழ். வணிகர் கழகத்தின் புதிய கட்டடத்திறப்பு விழாவினையொட்டி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி செயலாளர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பல்வேறுபட்ட யுத்த அனர்த்தங்களுக்கு மத்தியிலும் தமது சுயலாபம் கருதாது மக்கள் சேவையாக வணிகர் சேவையை நடத்தி வரும் யாழ். வணிகர்கள் தமக்கென ஒரு கழகத்தை அமைத்து அக்கழகத்திற்கு அலுவலகக் கட்டடத்தை நிர்மாணித்துள்ளமை எல்லோரும் பெருமைப்படக் கூடிய விடயமாகும். எனவும் அவ்வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# குருநகர் கடற்பரப்பில் மீன்பிடிக்க இராணுவம் அனுமதித்தது

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

ஐந்துமாடி பகுதியில் உள்ள குருநகர் இறங்குதுறையிலிருந்து பாஷையூர், மண்டைதீவு ஆகிய கடற்பகுதியை அண்மித்த பகுதி வரையுமான கடற்பரப்பில் தொழில் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலுக்கு அனுமதிக்கப்பட்டிருந்தபோதும் கரையோரப் பகுதியில் பெருமளவான மக்கள் தத்தம் வீடுகளை விட்டு வெளியேறியிருப்பதால் அப்பகுதியில் மக்கள் நடமாட்டம் அரிதாகவே காணப்படுகிறது.

இதேவேளை இடம்பெயர்ந்துள்ள அனேகமான மீனவ குடும்பத்தினருக்கு இன்னமும் இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-12)

கோப்புகொடுக்கவல்லது. மக்கள் தேவையுணர்ந்து, பொருள் தட்டுப்பாடுகளை நீக்க உன்னிப்பாக இக்கழகம் செயல் பட வேண்டும்.

இக் கழகத்திற்கு மிகப் பிரதானமாக வேண்டிய கடப்பாடு ஒன்றுண்டு. தவிச்ச முயல் அடித்துப் பாவனையாளர்களைப் பொறுமை இழக்கச் செய்யக்கூடாது. பதுக்கல் என்னும் பாவச் செயலை ஒட்டு மொத்தமாக நீக்க வேண்டும். இவை அற்ற வணிகர் குழாம் இறைவனைப் போல் பேணிப் போற்றப்படும்.

பொன்றுங்கால் பொன்றாத்துணையாக விருக்க, அறநிலையங்களுக்கும், அன்ாதரவானவர்க்குத் துணைக்கரம் நீட்டலும் பொருளீட்டலின் ஒரு பகுதியாகவிருக்க வேண்டும். வணிகர்கரங்கள்இந்த மண்ணை இறுக அணைத்துக் கொள்ள வேண்டும். ஒரே பார்வை, ஒரே இலக்கு, ஒரே கருத்துடன் வணிகர்கள் இயங்கவேண்டும்.

திண்ணிதாய் திகழும் வணிகர் கழகக் கட்டடம் போல் கழகநிர்வாகிகளும் அங்கத்தவர்களும் ஒன்று பட்டு நன்று பல செய்ய வேண்டும். நிலை குலையாது நீடு நீள்பணியாற்ற வேண்டும்.

அன்புடன் ஆசிரியர்!

# மக்கள் நிலையை உலகிற்கு எடுத்துக்கூற

# பாராளுமன்ற பிரதிநிதித்துவம் தேவை

## ஈ. பி. ஆர். எல். எவ். வரதர் கருத்து

(தென்மராட்சி)

யாழ். குடாநாட்டின் இன்றைய யுத்த சூழ்நிலையின் மத்தியில் தேர்தல் முக்கியமா? அதனைப் பின்போட முடியாதா? எனச்சிலர் கேட்கிறார்கள். அதுவும் வேட்பு மனுத்தாக்கல் செய்து வேட்பாளர்களாகவும் இருக்கும் குழுவினரே இவ்வாறு பேசுகிறார்கள். நிச்சயமாக இது பாசாங்குத்தனமானதே.

இவ்வாறு யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் சுயேட்சைக் குழுவில்போட்டியிடும் ஈ. பி. ஆர். எல். எவ் வரதர் அணியினால் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாவது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியைப் பொறுத்தவரை தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் எமது மக்கள் பாராளுமன்றப் பிரதிநிதித்துவமும்இல்லாமல் நிர்க்கதியாக வாழ முடியாது. அது எத்தகைய அவலம் என்பது பகுத்தறிவுள்ள எவருக்கும் விளங்கும். எமது மக்களின் நிலையை உலக அரங்குக்கு எடுத்துக் கூறுவதற்கும் அரசுக்கும் ஏனைய சமூகங்களுக்கும் எடுத்துரைப்பதற்கும், மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை எதிர் கொள்வதற்கும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் இருப்பது அவசியம். கடந்த 10 வருடங்களாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல் வடக்கு-கிழக்கு மாகாணசபை ஊழல் மற்றும் தான்தோன்றித்தனத்தின் இருப்பிடமாக மாறியுள்ளது. கிழக்கு மாகாணத்தில் கலைக்கப்பட்ட உள்ளுராட்சி சபைக்குப் பிரதிநிதித்துவம் இல்லாமல் இருக்கின்றது.

எனவே மக்கள் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் இல்லாவிட்டால் எவ்வாறு மக்களின் குரலை முன்னெடுத்துச் செல்வது. எத்தகைய கஷ்டங்கள் இருப்பினும் மக்கள் தமது பிரதிநிதித்துவ உரிமையைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் வாக்களிக்கும் உரிமையைப் பிரயோிக்க வேண்டும். இயலுமான வரை எல்லோரும் வாக்களிக்கவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறவிரும்புகிறோம்.

மக்களைப் பொறுத்தவரை அவர்கள் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் ஒற்றுமையையே வலியுறுத்தினார்கள்; பாராளுமன்றத் தேர்தலில் பங்குபற்ற வேண்டாம் என்று கூறவில்லை.

மக்கள் தமது கருத்துக்களைக் கூறவும் இடமில்லை. அவர்களின் வாக்களிக்கும் உரிமையையும் தள்ளிப்போட வேண்டும் என்று கூறுவது பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கவே வழிவகுக்கும். எனவேதான் தேர்தல் உரிய நேரத்தில் நடைபெறுவதும் மக்கள் வாக்களிப்பதும் முக்கியமான விடயங்கள் என்பதை வலியுறுத்திக் கூறுகின்றோம்.

இப்படி அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (த77

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் படிப்பகம்

# வடபகுதி மக்கள் வாக்களிப்பதாயின் அரசு யுத்தநிறுத்தம் செய்யவேண்டும்

### ஐக்கிய சோஷலிசக் கட்சி கருத்து

(கொழும்பு)

வடபகுதியில் தேர்தல் நடத்துவதாயின் அரசாங்கம் உடனடியாக அங்கு யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வர வேண்டும்.

தற்போது அங்கு நிலவும் யுத்த சூழ்நிலையால் மக்கள் தேர்தலில் அக்கறை காட்டவில்லை இவ்வாறு ஐக்கிய சோஷலிஸ கட்சி அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

அக்கட்சியின் செயலாளர் ஸ்ரீதுங்க ஜெயசூரியாவினால் அனுப்பப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடபகுதியில் அரச படைகள் பெரும்போரை மேற்கொண்டுள்ளது இந்நிலையில் மக்கள் இடம்பெயர்ந்து வன்னியிலும், கொழும்பிலும் தங்கியுள்ளனர்.

அங்குள்ள மக்கள் தேர்தலில் வாக்களித்தாலும் சரி வாக்களிக்காவிட்டாலும் சரி தேர்தல் நடத்தியதாக சர்வதேசத்திற்கு காட்டுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

வடபகுதி மக்கள் வாக்களிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமாயின் அரசு உடனடியாக யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும். இல்லாவிடில் அங்கு நடைபெறும் தேர்தலை ஒருபோதும் ஏற்க முடியாது என்றும் அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

### ★ வாக்காளர் அட்டையில் "ஸ்ரிக்கர்"

# தேர்தல் ஆணையரின் திட்டத்திற்கு ஒன்பது அரசியல் கட்சிகள் ஆதரவு

(கொழும்பு)

வாக்காளர் அடையாள அட்டைகளுக்கு 'ஸ்ரிக்சர்' ஒட்டும் பணிகளை மாவட்டச் செயலகங்களில் இன்று முதல் ஆரம்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை தேர்தல் ஆணையாளர் எடுத்துள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தல் நீதியாகவும், நேர்மையாகவும் நடத்துவதற்கு 'ஸ்ரிக்கர்' ஒட்டும் ஒரு அம்சத்தைத் தவிர மேலும் இரண்டொரு அம்சங்கள் இருப்பதாகவும் அவை மிகவும் இரகசியமாக வைத்திருக்கப்படுவ தாகவும் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தேர்தல் ஆணையாளரின் ஸ்ரிக்கர் முறையால் பொது ஜன ஐக்கிய முன்னணி ஆத்திரமடைந்துள்ள போதும் ஐ.தே.கட்சி, ஜே.வி.பி, சிஹல உறுமய, பூமிபுத்திர ஆகியவை உட்பட ஒன்பது கட்சிகள் ஆணையாளருக்கு தமது ஆதரவு தெரிவித்துள்ளன.

இதேவேளை தேர்தல் ஆணையாளரின் வாசஸ்தலத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாக வெளிவந்த செய்திகளில் எதுவித உண்மையுமில்லை என தேர்தல் ஆணையாளர் தயானந்தா திஸநாயக்கா தெரிவித்துள்ளார். (வ)

## சிற்றிஒவ்றிங்கோ இன்றுபுறப்படும்

(யாழ்ப்பாணம்)

சிற்றிஒவ்றிங்கோ பயணிகள் கப்பல் இன்று புறப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பயணச் சீட்டு பெற்றவர்களை பயண ஏற்பாடுகளுடன் யாழ் சிங்கள மகா வித்தியாலயத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந)

## சிறைக்கைதிகள் யாழ் வருவர்

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படுவதற்காக திருகோணமலையிலிருந்து பன்னிரெண்டு கைதிகள் அழைத்து வரப்படவுள்ளனர்.

இன்று வரவுள்ள கப்பலில் இவர்கள் இங்கு கூட்டிவரப்படுவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ந-12)

ஈழத்தை...

வாரா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை தேர்தல் நேர்மையாகவும் நீதியாகவும் நடைபெற வேண்டிய ஒழுங்கு செய்ய வேண்டும் என்றும் அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. (வ)

அரச...

இந்த சுற்றுநிருபம் சகல அரச திணைக்களங்களுக்கும் கூட்டுத்தாபனங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அச் சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

எதிர்வரும் 1ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை அனைத்து லீவுகளும் ரத்துச் செய்யப்பட்டிருக்குமென்றும், ஏற்கனவே லீவுகள் பெற்றிருந்தால் அந்த லீவுகள் யாவும் காலாவதியாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தற்பொழுது யாராவது லீவு போட்டிருந்தால் அந்த லீவும் ரத்துச் செய்யப்படுமெனவும் சகலரும் கடமைக்கு சமுகம் கொடுக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை தேர்தல் கடமைகளில் சுமார் ஒரு லட்சம் அரச ஊழியர்கள் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

மகா சங்க...

டுமே பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியுமென பிரதமர் கூறினார்.

இதேவேளை சிறுபான்மையினரும் இந்நாட்டில் வாழ்வதற்கு உரித்துடையவர்கள் என்பதை மகாசங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (ந)

மேலதிக...

ஜெயரட்ணத்தின் பெயர் சேர்க்கப்பட்டிருந்ததும் அதனை மறுத்து அவர் பத்திரிகைக்கு அறிக்கை விட்டிருந்ததும் ஏற்கனவே தெரிந்ததே.

இதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே அவருக்குக் கட்டாய லீவு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் அஷ்ரப்புடன் சேர்ந்த கட்சியே தேசிய ஐக்கிய முன்னணி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

அரியாலை...

யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதை அடுத்தே இவ்வனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொருட்களை மீட்டுவருவதற்கு அனுமதி கேட்டு பெயர் விபரங்களை சமர்ப்பித்தோரும் இதுவரை பெயர்களை சமர்ப்பிக்காதவர்களையும் நாளை காலை 10மணிக்கு ஈ.பி.டி.பி.யின் யாழ். தலைமைக் காரியாலயத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந)

# சொப்பிங் பாக்கிலிருந்து பெற்றோல் கண்டுபிடிப்பு

### அதிசயம்; ஆனால் உண்மை

(கொழும்பு)

சொப்பிங் பாக்கில் இருந்து பெற்றோல் தயாரிக்கும் புதிய முறையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

களுத்துறையைச் சேர்ந்த நிரஞ்சன் வீரக்கோன் என்ற சமுர்த்தி முகாமையாளரே இவ்வதிசயக் கண்டுபிடிப்பை மேற்கொண்டுள்ளார்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரியான இவர் சொப்பிங்பாக் மற்றும் பொலித்தின் உறைகளையும் தண்ணீரையும் மூலப்பொருளாகக் கொண்டு பெற்றோலைத் தயாரித்து வருகிறார்.

ஒரு கிலோ பொலித்தின் மூலம் ஒரு லீற்றர் பெற்றோல் தயாரிக்க முடியுமென அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

நாவற்குழிப் பகுதியில் கடந்த 9ஆம் திகதி இராணுவத்துடன்ஏற்பட்டமோதலில்

வீரவேங்கை

● சதுரசா

(கந்தையா விமல் ரஞ்சிதம்)

மட்டக்களப்பு

என்ற போராளியும் 12 ஆம் திகதி எதிர் பாராமல் ஏற்பட்ட மோதலில்

வீரவேங்கை

● கோமகள்

(சிங்கராசா பரிமளா) யாழ் மாவட்டம்

என்ற போராளியும் கடந்த 8ஆம்திகதி கச்சாயில் ஏற்பட்டமோதலின் போது விழுப்புண் அடைந்த

வீரவேங்கை

● சிவநாதன்

(சுப்பையா யோகேஸ்வரன்)

வவுனியா

என்ற போராளியும் 12 ஆம் திகதி அரியாலையில்ஏற்பட்ட மோதலில்

● லெப்.வாமேரன்

(அர்ச்சுனன் ஜெரூபன்)

வவுனியா

வீரவேங்கை

● திருக்கோவை

(குமாரன் ஸ்ரீவள்ளி) யாழ்ப்பாணம்

ஆகிய போராளிகளும் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ந)

## அன்பளிப்பு

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு ஊடாக, 1500 தென்னங்கன்றுகள், பயனாளிகளுக்கு வழங்கப்பெற்றுள்ளன. (த-103)

புலிகளின்...

ஒரு பொலிஸாரும் காயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு கல்குடா இராணுவ முகாம் மீதும் அதனை அண்மித்துள்ள பொலிஸ் காப்பரண் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரு இராணுவத்தினர் பலியாகியதுடன் ஒரு இராணுவமும் பொலிஸார் ஒருவரும் காயமடைந்தனர். இத்தாக்குதலை அடுத்து இடம்பெற்ற வெடி விபத்தில் வீடு ஒன்று சேதமடைந்ததுடன் 2பெண்கள் உட்பட 4 பொதுமக்கள் காயமடைந்தனர்.

இதேவேளை மட்டக்களப்பிலிருந்து வெலிகந்த நோக்கிச் சென்ற இராணுவ அணி மீது வாழைச்சேனை சங்காங்கேணிச் சந்தியில் வைத்து நேற்று நடத்தப்பட்ட மற்றொரு தாக்குதலில் 4படையினர் காயமடைந்தனர்.

விடுமுறையில் சென்ற படையினரை ஏற்றிச்சென்ற இ.போ.சபைக்குச் சொந்தமான பஸ் வண்டி ஒன்றே இத்தாக்குதலுக்கு இலக்கானது. இதன்போது பஸ்வண்டியின் முற்பகுதி முற்றாகச் சேதமடைந்தது. (வ-சு-108)

அவசரகாலச்...

முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் இரண்டாவது முறையாக இத் தேர்தல் நடைபெறவுள்ளது.

முன்னைய ஐக்கியதேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் இரண்டு முறை தேர்தல்கள் நடைபெற்றபோதும் அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்ட பின்பே அத் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால் தற்போது நடாத்தப்படவிருக்கும் பொதுத் தேர்தலை முன்னிட்டு அவசரகாலச் சட்டத்தின் சில விதிகள் மட்டுமே நீக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இன்று அவசரகாலச்சட்டம் நிறைவேற்றப்பட்டால் அடுத்தமாதம் 14ஆம் திகதிவரை சகலரும் பாராளுமன்ற உறுப்பினர்களாக பதவியில் இருப்பார்கள், இதனால் அவர்களுக்கு கிடைக்கவுள்ள மாதச்சம்பளம், விசேடபடி, பாதுகாப்பு, மற்றும் விடுதிவசதி, தொலைபேசி வசதி, போக்குவரத்து வசதிகள் யாவற்றையும் அனுபவிப்பார்கள். (வ)

தேர்தல்...

வதந்திகளை நம்பவேண்டாமெனவும் கேட்டுள்ளார்.

சுட்டுக் கொலை செய்யப்பட்ட குமார் பொன்னம்பலத்தின் "மாமனிதர் பட்டத்தை தேர்தலில் உபயோகிக்க வேண்டாம் என்றுஅறிவிக்கப்பட்டுள்ளதாக அண்மையில் கொழும்புப் பத்திரிகையொன்று வெளியிட்ட செய்தியில் எதுவித உண்மையும் இல்லை என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-சு)

வீணையே உங்கள் இன்னம்! சேவையே எங்கள் எண்ணம்!

தமிழ் முஸ்லிம் உறவு தான்
தாயக விடிவிற்கு திறவுகோல்!
அளித்திடுவீர் உங்கள் வாக்குகளை
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கே!

(ஈ. பி. டி. பி)





(இ/736)

தமிழ் பேசும் மக்களின் நீண்டகால வரலாற்றை எடுத்தியம்பத் தொல் பொருட்கள் சேகரித்துப் பேணிப் பாதுகாக்க அச்சுவேலியில் கவின்கலை மன்றம் ஈ. பி. டி. பி. யினால் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில்2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.